607

உ
சிவமயம்

607
1-56

# ஆலங்குடி என வழங்கும்
# திரு இரும்பூளை
# தல வரலாறு

MADRAS

சென்னை இந்துமத பரிபாலன போர்டாரவர்கள் சுற்றறிக்கைப்படி.

தேவக்கோட்டை பெருநிலக்கிழாரும், தருமசீலரும்,
திருக்கோவில் மானேஜிங் டிரஸ்டியுமாகிய
**திரு. பழ. செ. பழ. செல்லப்ப செட்டியார்**
அவர்கள் கருத்திற்கிணங்க

மன்னார்குடி தமிழாசிரியர்,
**ப. இராமநாத பிள்ளையால்**
எழுதப்பெற்றது.

வெளியிட்டவர்,
**Dr. G. R. வெங்கிட்டராமலு நாயுடு,**
V. H. M. பப்ளிஸிடி சர்வீஸ்,
ஸ்ரீ ரெங்கராமானுஜன் விலாஸ்,
73, ஆலங்குடி, (Via) நீடாமங்கலம்.

ராஜேஸ்வரி பிரஸ், மன்னார்குடி.

லை] 1956 [அணா 4

Q23: 38.21PU
N56.

# முகவுரை.

மூர்த்திதலந் தீர்த்தம் மூன்றாலும் சிறந்து விளங்கும் சிவ தலம் பலவற்றுள்ளும் தலைசிறந்த இத்தலம் ஆலங்குடியென வழங்கி திருஇரும்பூளை என்று சம்பந்தரால் தேவாரம் பெற்று காசியாரண்யம் என்று புராணத்தால் புகழப்படுவதாகும்.

இத்தலம் அரித்வாரமங்கலமென்னும் அரதைப் பெரும் பாழிக்குக் கிழக்கே 4 மைலிலும், ஆண்டான்கோயில் என வழங்கும் கடுவாய்க்கரைத் தென்புத்தூருக்கு நிருதி மூலையில் 4 மைலிலும், திருக்கொளம்பூதூருக்கு மேற்கே 4 மைலிலும், பூவனூருக்கு வடக்கே 6 மைலிலும் அமைந்துள்ளது.

சிவபெருமானது பரத்வத்தை நிலைநிறுத்தும் பல அரிய செயல்களிலும் அரியதாகும். ஆலகாலமுண்டு நீலகண்டராய் விளங்கும் அற்புதம் செய்த தலமிதுவே. மனிதனாய்ப் பிறந்த ஒருவன் அடையவேண்டிய உறுதிப்பயனாகிய வீடடைதலுக்கு இன்றியமையாத ஞானோபதேசத்தை இத்தலத்தில் சிவபெருமானே குருமூர்த்தமாய் சனகாதி நால்வர்க்குபதேசித்தருளினார். இங்குள்ள குரு தெட்சணாமூர்த்தியைத் தெரிசிக்கவேண்டியது அவசியம். இம்மூர்த்திக்கு ஒப்பாக வேறெந்தத் தலத்திலும் குருவடிவமில்லை. மேலும் திருவிடைமருதூர் மகாலிங்கக்ஷேத்திரத்திற்கு இத்தலம் குருமூர்த்தித் தலம் என்று சொல்லப்படும்.

இங்குள்ள பார்வதிதேவியும் பரமனைக் கைலையினின்றும் பிரிந்து இங்கே தவஞ்செய்து "ஏலாளகே" என்று சிவபெருமானால் பெயரிடப்பெற்றுத் திருமணஞ் செய்துகொள்ளப் பெற்றனள். இத்தகைய சிவாலயம் மிகவும் சீரணித்திருந்த நிலையில் சிவநேசச் செல்வராகிய தேவகோட்டை பழ. செ. பழ. லெட்சுமணஞ் செட்டியார், பழநியப்ப செட்டியார் (சகோதரர்கள்) சுமார் ஐந்து லட்சம் ரூபாய் செலவில் சிறந்த திருப்பணி செய்து சென்ற பிரமோதூத ஆண்டு வைகாசித்திங்கள் பத்தொன்பதாம் நாளில் சுமார் ரூபாய் நாற்பதாயிரம் செலவில் (1930-ம் ஆண்டு) கும்பாபிஷேகமும் செய்தமை பெரிதும் போற்றத்தக்கதே. இதுபோதும் ஷையார்கள் குடும்பத்தினராகிய பழ. செ. லெ. பழ. செல்லப்ப செட்டியார், மீனாட்சிசுந்தரஞ் செட்டியாரவர்களும் முத்துகரு. மு. முத்தையா செட்டியாரவர்களும் முறைமையாகக் கவனித்து ஆலயம், பூசைகளைச் செவ்வனே நடத்துவது சிவபக்தர்கட்கு மகிழ்ச்சியை விளைவிப்பதாகும்.

அன்பன்,

**ப. இராமநாதன்.**

O23:38.211
N36

உ
திருச்சிற்றம்பலம்.

# ஆலங்குடி என வழங்கும் திருஇரும்பூளை தல புராணச் சுருக்கம்

ஜில்லா:- **தஞ்சாவூர்.** தாலூகா:- **பாபநாசம்.**

ரயில்:- **நீடாமங்கலம்** ஜங்ஷனிலிருந்து கும்பகோணம் வரும் கப்பிச் சாலையில் 4 மைல். (கும்பகோணத்திலிருந்து நீடாமங்கலம் வழியில் 11 மைல்.) பஸ் வசதிகளுண்டு.

தலவிருட்சம்—**பூளைச்செடி** (அனிச்சப்பூ)

ஆறு:- வடக்கே 2வது மைலில் **வெட்டாறு** இருக்கிறது.

**தீர்த்தவிசேஷம்:-** இத்தலமுழுதும் தீர்த்தங்களால் சூழப்பெற்றது. ஆலயமே அமுதபுஷ்கரணியால் நாலுபுறமும் சூழப்பெற்றது. (தீர்த்த விவரங்களைப் பின்னுள்ள தேவர் முதலாயினோர் பூசித்த வரலாற்றில் விவரமாகக் கூறப்பட்டிருக்கிறது.

**கிணறு:-** சந்நிதியில் **ஞானகூபம்** எனும் தீர்த்தம் இருக்கிறது.

## தெய்வ மூர்த்தங்கள்.

தெற்கு கோபுரவாசல்:- அகளங்க விநாயகர்.
மூலவர்:- ஆபத்சகாயேசர்—காசியாரண்யர்.
உள்சுற்றுப் பிராகாரம்:- நர்த்தன கணபதி.
தெட்சணாமூர்த்தி:- கும்பாபிஷேக தினம் நூதனபிரதிஷ்டை.
திருமாளிகைப்பத்தி:- (வடக்குமுகமாக) நால்வர். சூர்யேசர், சோமேசர், குருமோட்டேசுரர், சோமநாதர், சப்தரிஷிநாதர், விஷ்ணுநாதர், பிர்மேசர், ஆக சப்த லிங்கங்கள் 7, அகத்யர் 1.

மேற்குப்பிரகாரம் (கிழக்குமுகமாக) காசிவிசுவநாதர், விசாலாட்சி, (கும்பாபிஷேக தினம் நூதன பிரதிஷ்டை) ஆக்ஞா கணபதி, (மூல விநாயகர்) சோமாஸ்கந்தர்.

**உற்சவ மூர்த்திகள்** (மேற்குப் பிரகாரம்)

கலங்காமற் காத்த விநாயகர், நிர்த்தன கணபதி, பக்தர், சந்திரசேகரர், சுப்பிரமணியர் வள்ளி தெய்வானை, சண்டேசர், கல்யாண சாஸ்தா, சப்தமாதா.

மூலவராக:- வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணிய சுவாமி, மகாலட்சுமி, வடக்கு பிரகாரம் பிரமா, சண்டேசர், துர்க்கை, நவக்ருக மண்டபம் (பிரகாரம் வடபுறம்) நடராஜா-சிவகாமி, மாணிக்கவாசகர், உற்சவ தெட்சணாமூர்த்தி (எதிரில் சம்பந்தர், அப்பர், சுந்தரர்) மேற்கு முகமாக பைரவர், சந்திரன், சூர்யன். வெளியில்:- சுக்ரவார அம்மன், (மண்டபம் தெற்குமுகம்) மூலஸ்தானம் அம்பிகை-ஏலவார் குழலம்மை.

தனிப்பிரகாரம்:- சண்டேசரி பள்ளியறை.

சனீசுரர்:- மேற்கு நோக்கியது விசேஷமான மூர்த்தி. தென்கோபுரவாசல் மேல் வடக்கு முகமாக பாலசுப்ரமண்யர்.

சப்தமாதா:- கீழக்கோபுரவாயில் தென்புறம் வடக்கு நோக்கிய சந்நிதி.

ஈசான்ய திக்கில் பாதாள பைரவ காளியம்மன்.

தெற்குக் கோபுரவாயில் கீழ்புறம் மேற்கு நோக்கி கல்யாண சாஸ்தா, பூரணம்பாள், புஷ்களாம்பாள், (இரு சக்திகளுடன்) நூதன ஆலயம்.

தேர்முட்டிக்கருகில் கிழக்கு நோக்கி நூதன ஆலயம் கல்யாண வீரபத்ரர், இடும்பன், பிரம தீர்த்தக் கரையில் நர்த்தன கணபதி.

97328

## க்ஷேத்திர மகிமை.

சிவதலம் நிறைந்த சோழமண்டலத்தில் காவிரி நதியின் தென்பாகத்தில் ஒரு காத தூரத்தில் இத்தலம் அமைந்துள்ளது. இங்கு விளங்கும் விநாயகர் கலங்காமற் காத்த விநாயகர் எனப் பெயர் பெறுவர். முதலில் அவரது பெருமையான சரிதம் போற்றிக் கேட்கத்தக்கது.

மாகதர் என்னும் ரிஷிக்கு கஜாசுரன் என்று ஓர் புத்திர னிருந்தான். அவன் அதிக பலவானாயிருந்தமையால் தினந் தோறும் உலகத்தினருக்குத் துன்பம் இழைந்துவந்தான். ஒருநாள் அண்டச் சுவர்களையுந் தகர்த்து அப்புறமுள்ள கங்கையால் இவ்வுலகத்தை மூழ்கச்செய்தான். உலகத்துயிர் கள் கலங்கின. மும்மூர்த்திகளும், இந்திராதி தேவதைகளும் கூடியோசித்துச் சிவபெருமானைத்தவிர கதியில்லையாதலால் அவரையே சரணமடைவோம் என்று துணிந்து ஊழியிலும் அழியாக் காசியாரண்யத்தையடைந்து சிவனைத் துதிசெய்து சரணமடைந்தனர்.

சிவபெருமான் தேவர்களை நோக்கி "நீங்கள் இதுவரை கஜமுகாசுரனுக்குச் செய்த மரியாதைகளைச் சிரசில் குட்டிக் கொண்டு, தோப்புக்கண்டம் போட்டுத் தேங்காயுடைத்து வணங்கியதை நிறுத்தி, எனது மூத்த புத்ரனாகிய கணபதிக் குச்செய்யுங்கள். அவனே அவ்வரக்கனைக் கொன்று உங்களைக் காப்பாற்றுவான்"! என்றருளிச்செய்தார். தேவர் களும் கணபதியைப் பூசித்து, தேங்காயுடைத்து, தலையிற் குட்டிக்கொண்டும், தோப்புக்கண்டமும் போட்டனர்.

கணபதியும் பூசையேற்று, நேரே காட்சிதந்து, இத் தலத்துக்குள்ளேமட்டும் வரப்பயந்து எல்லாவுலகங்களையும் மூழ்கடித்து நிற்கும் வெள்ளத்தைத் தமது துதிக்கையை நீட்டி குழந்தைகள் தாமரைத் தடாகத்தில் தாமரைத்தண்டி னால் நீருறுஞ்சுவது போல இழுத்து ஒழித்தருளினர்.

மூவருந்தேவரும், உலகமும் பயமொழிந்து ஆனந்த வெள்ளத்தில் அமிழ்ந்தனர். கலங்கிய உலகத்தைக் காத்தமையால் இவரைக் கலங்காமற் காத்த விநாயகர் என்று பெயர் வைத்து யாவரும் வழிபடுவாராயினர்.

ஹரிஹரபுத்ரர், வீரபத்ரர், பார்வதி தேவிக்குக் காவல் புரிந்து திருக்கல்யாணத்தில் விருந்தினரையுபசரித்து இங்கே நிலைத்திருக்கும் வரலாறு தேவியார், திருக்கைலாயத்தில் சிவபெருமானோடு பந்தாடியபோது ஏற்பட்ட சாபத்தால் இத்தலத்தையடைந்து தனியே தவம் செய்து கொண்டிருக்க சிவபெருமான் மனமிரங்கி மகாவீரர்களாய் தன்னிடத்திருந்து தோன்றிய ஹரிஹரபுத்ரரையும், வீரபத்ரரையும் பார்த்து தனியே தவம் செய்யும் பார்வதியம்மைக்குக் காவல் புரிந்துவரக் கட்டளையிட்டருளினர். அவர்களும் அடி பணிந்து, விடைபெற்று உடனே இத்தலத்தையடைந்து, தாயை வணங்கித் தமக்குச் சிவபெருமானிட்ட கட்டளையையுரைத்தனர். அம்மையாரும் அகமகிழ்ந்து அன்புடன் ஏற்றுக் கொண்டு காவலிருக்கக் கட்டளையிட்டருளினர். இருவரும் பணிவிடைசெய்து காவலிருந்து வருநாளில், சிவபெருமான் தேவியின் தவத்துக்கிரங்கிக் காட்சிதந்தார். திருக்கல்யாணமும் வந்தது. இவ்வீரரிருவரும் தமக்குரிய வேலைகளைக் கட்டளையிட்டருளும்படி தேவியை வணங்கினர்.

தேவியும் தமது திருக்கல்யாணத்துக்கு வரும் மூவர், தேவர், முதலியவர்கட்குத்தக்க சிறப்புச்செய்து, கல்யாண சாஸ்தா, கல்யாணவீரபத்ரர் எனும் சிறப்புப் பெயர்களோடு மங்களமாக இத்தலத்திலேயே எந்நாளும் இருந்து வாழ்க என்று ஆசிகூறியருளினள். அப்படியே இருவரும் சந்நிதியின் முன்னர் இன்றும் எழுந்தருளியிருக்கின்றனர்.

**சுந்தரமூர்த்தி நாயனருக்குச் சிவபெருமான் ஓடம் விட்டது.**

கைலாயத்தில் சிவபெருமானிடத்திலே திருவணுகத் திருத்தொண்டராய் விளங்கும் சுந்தரமூர்த்தி தென்னடு



கோவில் தோற்றம்

செய்தவப்பயனுய், சைவந்தழைக்கத் திருமுறை விளங்க, திருத்தொண்டத்தொகையருள் செய்ய சிவாச்சார்ய மரபில் அவதாரஞ் செய்தார். திருமண காலத்தில் சிவபெருமானுலே தடுத்தாட்கொள்ளப்பட்டு, சிவதலங்கடோறும் சென்று தேவாரம் பாடி. அளவிலாத பல அற்புதங்களையும் செய்து வருவாராயினர். இப்படியிருந்து வருநாளில், இத்தலத்திலுள்ள சிவபெருமானைத் தெரிசிக்கும் பொருட்டு அடியார்களுடன் எழுந்தருளி வந்தபோது அகத்திய காவிரியாகிய வெட்டாறு வெள்ளமெடுத்தோடியது. பெருவெள்ளம் வந்ததால் ஓடக்காரனுமில்லாதுபோகவே, சிவதெரிசனத்துக்கு இடையூறு நேர்ந்ததேயென்று யாவரும் வருந்திச் சிவனைத் தோத்தரித்தனர்.

அப்போது ஆபத்சகாயராகிய சிவபெருமான் ஓடந்தள்ளுவோனைப்போல வேடந்தரித்து அவ்விடத்துக்கு வந்தருளினுர். அன்பர்கள் சிவபெருமானது திருவருளே இப்படி நமக்கருள்செய்ய வந்ததென்று சொல்லி மகிழ்ந்து ஓடக்காரரை வரவேற்று "ஓ ஓடக்காரனே! நீ ஆபத்து வேளையில் இங்கு எம்மிடம் வந்ததால் உன்னை ஆபத்சகாயன் என்றே மதிக்கிறேம். காசியாரண்ய தலத்துக்குச் சென்று சிவபெருமானைத் தெரிசிக்கச் செய்யவேணும். உனக்கும் சிவபுண்யங்கிடைக்கும். நாம் என்ன கூலி கேட்டாலும் தருவோம்" என்று நாயனுர் சொல்லவே, "ஐயா! சிவபக்தர்களே! நான் இப்படிச் சம்பாதிக்கும் பொருளில் என் வயிற்றுக்கு வேண்டியதை மட்டும் எடுத்துக்கொண்டு மீதத்தைச் சிவார்ப்பணமாகப் பூந்தோட்டத்தை விருத்தி செய்து வருபவன்." என்று கூறினுர். அன்பர்கள் ஆச்சரியமடைந்து அவரை வணங்கினர். நாயனுர் உடனே ஆயிரம் பொன் கொடுத்தார். ஓடக்காரரும் மகிழ்ந்து வாங்கி அதை அப்படியே சிவார்ப்பணம் என்று சொல்லி ஓரிடத்தில் வைத்து "ஐயா! அடியார்களின் தலைவரே ஆறு பெருவெள்ளமாயிருப்பதால், முதலில் உம்முடன் வந்த சில அன்பர்களைக் கரை சேர்ப்பேன். பின்னர் வந்து உம்மையும்

மற்றவர்களையும் கரை சேர்ப்பேன்'' என்று சொல்லிச் சிலரையேற்றி ஒரு நொடிப்போதில், அடியார்க்கடியார்களை யாரும் கடக்கமுடியாத பெரும் பிறவிக்கடலைக் கடக்கச் செய்து அக்கரை சேர்த்தருருளுவதைப்போல் காசியாரண் யத்தில் விடுத்து இமைக்குமுன் மீண்டும் நாயனரிடம் ஓடத் துடன் வந்தார்.

ஓடக்காரனை யாவரும் மெச்சினர். ஓடககாரனும், "எனது சாமர்த்தியத்தைப் பார்த்தீர்களா! அன்பர்களாகிய நீங்கள் எனக்கு அடையாளமாகச் சன்மானங் கொடுக்க வேண்டும்'' என்று கேட்க சுந்தரமூர்த்தி நாயனரும் சிவனைப் பாடித் தாம் பெற்றிருந்த இரண்டு பீதாம்பரங்களைக் கொடுக்கவே, ஓடக்காரர் மகிழ்ந்து பெற்றுக்கொண்டு நாய னரையும் அடியார்களையும் ஓடத்திலேற்றினர். ஓடத்தை வேகமாய்த்தள்ளிக்கொண்டு போகும்போது ஆற்றினடுவில் ஒரு சுழலுண்டாகும்படி மனதிற் சங்கற்பஞ்செய்தார். உடனே பெருஞ் சுழலொன்று ஓடத்தைக் கரகரவென்று சுற்றியது. பற்றுக்கோல் நழுவவே அதையெடுப்பதுபோல் பாசாங்கு செய்து தடுமாறி வெள்ளத்தில் மூழ்கி தத்தளித் தார். ஓடமும் தடுமாறி வெள்ளத்தின் வழியாய் இருநாழி தூரம் சென்று திருக்கொள்ளம்புதூரை யடைந்தது. கரையி னின்றோடும் படகிலுள்ள நாயனர் முதலியவர்களும் கலங்கிச் சிவனைப் பலவாறு துதித்தார்கள். திருக்கொள்ளம் பூர் என்னும் வில்வாரண்யத்திலுள்ள சிவபெருமான் அசரீரி யாக நாம் உம்மைச் சடுதியிற் காப்போம் என்று திருவாய் மலர்ந்தருளினர். ஓடமும் சிறிதுதூரம் சென்று கவிழ்ந்தது. அப்படி அமிழ்ந்த இடமே அமிழ்ந்தீசுவரம் என்ற பெயருடன் இப்போதும் விளங்குகிறது. அடியார்கள் ஹரஹரசப்தத்தை முழக்கித் துதிசெய்தனர்.

இப்படிச் சிறிது தூரம் செல்லவே ஓடம் ஒரு பாறை யில் மோதிச் சிதறுண்டது. இவ்விடமே கப்பலுடையான் என்று பெயர் பெறும். ஓடத்துடன் திருவிளையாடல்செய்து வரும் ஓடக்காரரும், சுந்தரர் முதலான அன்பர்களும்

சேர்ந்து துதிக்கச் சிவபெருமான் ரிஷபாரூடராய்த் தோன்றி யாவரையும் தன் கைகளால் தூக்கிக் காப்பாற்றினர். இவ்விடம் இப்போது கைப்பத்தூர் என்ற பெயருடன் விளங்கி வருகிறது.

நாயனர் முதலிய அடியார்கள் சிவதரிசனத்தால் தங்கள் கஷ்டங்களையெல்லாம் மறந்து தம்முடன் திருவிளையாடலைச் செய்ய ஓடந்தள்ளு வராகவும் வந்தருளிய அற்புதத்தைக் கொண்டாடிப் பலவாறு துதித்தனர். இப்படிக் கரையேறிய வுடன், அவ்விடத்திற்கு நிருதிமூலையிலிருக்கும் நிலீனவனே சரைத் தெரிசித்து கைப்பத்தூரிலிருக்கும் அஸ்தாவம்பே சுரரையும் தெரிசித்தனர். பின்னர் ஓடம் உடைந்த இடத்திற்கு மேல்புறமுள்ள நாவபக்கினேசுவரரை வணங்கி ஓடம் மூழ்கிய இடத்திலுள்ள நிமஜ்ஜனேசுவரரையும் தெரிசித்து, திருக்கொள்ளம்பூதூரைத் தெரிசித்து, சந்நிதியில் நின்று தோத்தரித்தனர். சிவபெருமான் நேரே காட்சிதந்து "நாம் நித்ய வாசம்செய்யும் காசியாரண்யத்தைத் தெரிசித்து தெக்ஷணாமூர்த்தியிடம் அருள்பெறுவீர்" என்று திருவாய் மலர்ந்தருளினர்.

அடியார்கள் யாவரும் கார்க்கோடன் என்னும் பாம்பு பூசித்ததால் அரவூர் எனவிளங்கும் தலத்திலுள்ள கார்க்கோடகேசுவரரைப் பூசித்து, சக்ரவாக பட்சியால் பூசிக்கப்பெற்ற கோகாமுகேசுவரரைத் தெரிசித்தினர். (இத்தலம் நீடாமங்கலத்திலிருந்து பழைய நீடாமங்கலத்திற்குப்போகும் வழியில் வயல்களுக்கு இடையில்—காசிவிசுவநாதசுவாமி கோயிலுக்கு அக்னி மூலையில் இருக்கிறது) பிறகு வடதிசையிலுள்ள காசியாரண்யம் வந்து சேர்ந்தனர்.

சிவாலயத்தைக் கண்டதும் யாவரும் நமஸ்கரித்துச் சிவநாமத்தை யுச்சரித்து முதலில் ஞானகூபத்திலும், அமிர்த புஷ்கரணியிலும், பிரம தீர்த்தத்திலும் நீராடிச் சந்நிதியடைந்து சிவதெரிசனம் செய்து, வலம் வந்து தெட்சணாமூர்த்தியைத் தெரிசித்து, துதித்து, ஞானோபதேசம் செய்தருளும்படி பிரார்த்தித்திருந்தார்.

சிவபெருமானுக்கும், தெக்ஷணாமூர்த்திக்கும் பலவித கைங்கர்யம் செய்துவரும் நாளில் குருமூர்த்தி சுந்தரமூர்த்தி நாயனுருக்குப் பஞ்சாட்சரத்தை யுபதேசித்தருளினுர். இத் தகைய பெருமையுடையதலத்தில் குருமூர்த்தியை தெரிசித்து வழிபடுவோர்க்கு சிவஞானம் எளிதில் கைகூடும். இங்கே பஞ்சாட்சரத்தைச் செபிப்போரது பலனேயளவிடமுடியாது.

சிலகாலம் செல்லவே சுந்தரர் முன்போலக் கை லாசத்தை யடைந்தார். இத்தலத்துக்கவருடன் முன்பு வந்த பல பக்தர்கள் இத்தலத்தையும் குருவையும் விட்டுப் பிரிந்து செல்ல மனமில்லாதவர்களாய் இவ்விடத்திலேயே யிருந்து சிவத்தியானம் செய்துவந்தனர். இவர்கள் சுந்தரமூர்த்தி நாயனுர் கைலாசத்தை யடைந்ததும் அவரைப்போல் ஒரு மூர்த்தத்தைச் செய்து ஆலயத்திலே வைத்துப் பூசித்து வருவாராயினுர்.

இஃது இப்படியிருக்க, திருவாரூரில் தியாகராஜர் உற்சவம் வந்தது. அப்போது அரசாண்ட ஈசசோழராஜா மிகவும் பக்தியுடன் திருவிழாவை நடத்தும் இயல்புடையவன். சுந்தரமூர்த்தியைப் பெரிதும் பூசிக்கும் பேரன்புடையவனுன தால், தனது தேசத்திலுள்ள எல்லா ஆலயங்களிலுமிருக் கும் சுந்தரமூர்த்தி யுருவங்களைத் தாம் பார்க்க ஆசை கொண்டு எல்லாவற்றையும் எழுந்தருளச் செய்தான் திரு வாரூராலயத்தில் எல்லா மூர்த்தங்களும் வந்து சேர்ந்தவுடன் ஈசசோழன் வந்து எல்லா மூர்த்தங்களையும் தெரிசித்தான் அவைகளில் மிக சுந்தரமாய் விளங்கியது இக்காசியாரண்ய மூர்த்தியென்று தெளிந்து இந்த மூர்த்தியை யிங்கேயே வைத்துப் பூசித்தான். தினமும் தெரிசிக்க விரும்பினுன். ஆனதால் மற்ற மூர்த்திகளைத் திரும்பக் கொடுக்க உத்தர விட்டான். இந்தச் சுந்தரமூர்த்தியுடன் வந்த சிவாசார்யார் இம்மூர்த்தியை விட்டுப்பிரிய மனமிலாதவராய் சுந்தரரையே தியானித்தபடியே உறங்கினுர். சுந்தரமூர்த்தி நாயனுர் கன விற்றோன்றி "ஏ அன்பரே நான் ஒரு குழந்தையாய் அம்மை வார்த்த வடிவத்தை யடைகிறேன். நீர் உமது குழந்தை

யென்று சொல்லி என்னைத் தூக்கிக்கொண்டு காவற்கார னிடம் விவரத்தைச் சொல்லி காசியாரண்யம் போய்ச் சேரும்" என்று கூறியபடி அச்சிவாசார்யாரும் செய்தார்.

அரசன் மறுநாள் காலையில் சிவதெரிசனத்துக்கு வரவே, காசியாரண்ய சுந்தரரைக் காணுமல் மனம் வருந்தி மந்திரியைக் கோபித்துக் கோயில் காவலர்களைத்தண்டிக்கும் போது தியாகேசர் அசரீரியாய் நடந்த உண்மையை யுரைத் தருளினர்.

சுந்தரரை மீட்டுக்கொண்டு வந்த சிவாசார்யார் வழி யில் திருக்கொளம்பூதூரிலுள்ள ஒரு வடவால விருட்சத் தினடியில் சுந்தரரை வைத்துவிட்டு ஸ்நான முதலியவற்றை முடித்துப் பின்னர் சென்று மூர்த்தியை யெடுக்க அது அசைக்க முடியாதபடி வேரூன்றியதைக் கண்டு வருந்திச் சென்று காசியாரண்ய வாசிகளுக்கு வரலாற்றை யுரைக்க யாவரும் திரண்டு சென்று பூசித்துப் பிரார்த்தித்தனர் இவிடம் கூவாலடி யென வழங்கும். பிறகு, சுந்தரரை யெடுத்தபோது முன்போல் எளிதாய் கைக்குவரவே, உடனே ஒரு புட்பரதத்தை யலங்கரித்து அன்பர்கள் யாவரும் ஆனந்தமாக சகல வாத்யங்களுடனும் திரும்பி வந்து இத் தலத்திலே வைத்துப் பூசித்து வருவாராயினர்.

## இத்தலத்தை விஷ்ணுவும், லெட்சுமியும் பூசித்தமை.

இத்தல சிவாலயத்திற்கு மேற்கில் விஷ்ணு வரதராஜர் என்னும் பெயருடன் இருந்து சிவத்யானம் செய்து வருகிறர். தற்போது அவ்வாலயம் மிக கிலமுற்றிருக்கிறது. திருப்பாற் கடல் கடைந்தபோது காளகூட விஷ முண்டாகி யாவரும் பயந்துச் சிவனைச் சரணமடைய ஓடிவந்தனர். விஷ்ணு தன் சக்கராயுதத்தால் அவ்விஷத்தைத் தம்பிக்கும்படி செய்து விட்டு, பிரளயத்திலும் நாசமடையாத இத்தலத்தை யடைந்து சிவனைப்பூசித்துவந்தார். திருப்பாற்கடலிலுதித்த லட்சுமியும் தன் நாதனைத் தொடர்ந்து வந்து பூசித்துத் தனக்குப் புத்ரப் பேறு அளிக்கும்படி பிரார்த்தித்தாள். லட்சுமிதேவி பெரு

மாளுடைய திருமஞ்சன முதலானதுக்காக ஏற்படுத்திய தீர்த்தம் லட்சுமி தீர்த்தமென விளங்குகிறது. இப்படிச்சில நாள் பூசித்ததால் திருப்தியடைந்தவராய் மகாவிஷ்ணு "ஏ லட்சுமியே" இத்தலத்திலுள்ள தட்சணமூர்த்தியைப் பூசித்தால் உனது எண்ணங்களெல்லாம் நிறைவேறும்" என்று கூறியபடியே லட்சுமிதேவி தெட்சணமூர்த்தியைப் பூசித்து வருவாளாயினள்.

சிவபெருமான் ஒருநாள் காட்சி தந்து வேண்டிய வரமுந் தந்தருளினர். உடனே லட்சுமி மகிழ்ந்து தன் நாதனிடம் சென்று வரம்பெற்றதைக் கூறியிருந்து வரும் நாளில் எல்லா லட்சணங்களும் பொருந்திய ஆறு குழந்தைகளைப்பெற்றள். அவர்களுக்கு கீர்த்தி, மணி, நிசரன், சாதவேதசன், காமன் மனேகரன் என்று பெயரிட்டு வளர்த்து வருவாராயினர்,

## கருடன் பூசித்துப் பேறுபெற்றது.

கருடன் தன் தாயாகிய வினதையைத் தன் பெரிய தாயார் ஓர் காலத்தில் வஞ்சனையால் தனக்கு அடிமையாக்கி வெகு கொடுமையாய் நடத்தி வந்ததையும் தனக்கு அப் பெரியதாயின் புத்திரர்களாகிய சர்ப்பசாதியினது விஷ பயத் தினல் எப்போதும் துன்ப மடைவதையும் தீர்த்துக்கொள்ள நினைத்தார். அவர் உலகத்திலே மிகவும் சிறந்த தலமென்ற ராய்ந்து இந்தக் காசியாரண்யமென்று தெளிந்து இங்கே சிவனது அருளைப்பெற்று மிகவும் சக்திமானய் விளங்கும் வரதராஜப்பெருமாளைப் பூசிப்பதற்கு இங்கே வந்தார். தேவ தீர்த்தத்தின் நிருதி மூலையில் தன் பெயரால் ஒரு தீர்த்த முண்டுபண்ணி, பெருமாளுக்குத் திருமஞ்சன மாட்டிப் பூசித்துத் தவம் செய்தார். வரதராஜரும் கருடனுக்குக் காட்சி தந்து "ஏ கருடா! எத்தகைய கொடிய பகையின் பயத்தையும், பாபத்தையும் போக்குவது சிவதெரிசனமாகும் நம்மையெல்லாம் காளகூட விஷத்தினின்று காப்பாற்றியவர் ஆபத் சகாயரைப் பூசித்தால் உன்தாயும் அடிமைத் தனத் தினின்றும் விடுபடுவாள், நீயும் விஷபயத்தினின்றும் விடு படுவாய்" என்று திருவாய் மலர்ந்தருளினர். கருடன் நமஸ்

கரித்து விடைபெற்று, தேவலோகம் சென்று அமுதங் கொண்டுவந்து சிவபெருமானுக்கபிஷேகித்துப் பூசித்தார். சிவபெருமான் நேரே காட்சி தந்து "ஏ கருடா! உன்தாயின் அடிமையை நீக்கினேம். உனக்கு இனி விஷபயமே யில்லை எந்தப் பாம்புக்குப் பயந்து வந்தாயோ அந்தப் பாம்பினம் உன் நிழலைக்கண்டு ஒடுங்கும். உன்னை நினைப்பவர்க்கும் விஷ பயமே யில்லாதொழியும், குருமூர்த்தியாய் இத்தலத்தில் விளங்கும் என்னைப் பூசித்ததால் உன்னைக் குருவாரத்தில் தெரிசிப்பவர்கட்குச் சகல சுபங்களு முண்டாகும்" என்று திருவாய் மலர்ந்தருளினர்.

## சங்கராசாரியார் உபதேசம் பெற்றது.

கேரள தேசத்தில் காலடிக் கிராமத்தில் சிவகுரு என்னும் அந்தணருக்கு வெகுகாலம் புத்ரப்பேறு இல்லா திருந்தது. அவரது கற்பிற் சிறந்த மனைவி ஆரியாம்பாளும், சிவபெருமானைநோக்கித் தவங்கிடந்தனர். பலகாலம் செல்ல இவர்கள் ஒரு நல்ல புத்ரனைப்பெற்றனர். சங்கரர் அருளால் பிறந்தமையால் சங்கராசாரியர் என்று பெயரிட்டனர். குழந்தை இளமையிலேயே எல்லா வித்தைகளிலும் மிகவும் வல்லவனய் ஞானத்தை உலகமெல்லாம் பரப்பவேண்டி இல்லறத்தை மேற்கொள்ளாமல் துறவை மேற்கொண்டு உலக சஞ்சாரம்செய்து பல சிவதலங்களையும் தெரிசித்து வந்தது.

இங்கே நால்வர்க்குக் குருமூர்த்தமாய் இருந்து யாவர்க்கும் அருள் செய்யும் ஞானமூர்த்தியான தெட்சணாமூர்த்தியை தெரிசித்து, பக்தி வெள்ளம் பெருக ஸ்ரீ தெட்சணாமூர்த்தி தோத்திரம் என்னும் பத்து (ச்லோகம்) செய்தருளினர்.

தெட்சணாமூர்த்தி நேரே காட்சி தந்து சங்கராசாரியாருக்கு அறுபத்துநான்கு கலைஞானங்களையும் போதித்து சிவஞானத்தையும் தந்தருளினர்.

திருக்கைலாச மலையில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானை முனிவர்கள் கூட்டங்களுடன் சிவ பக்தியிற்

சிறந்த துருவாசமுனிவர் தெரிசிக்கச்சென்றார். அப்போது பக்தி வெள்ளம் மேலிட்டு துருவாசர் சிவனை யளவில்லாத படி தோத்தரித்து ஆடிப்பாடிப் பரவசமானார். தோத்திரத்தினால் பிரியமடையும் சிவனும் தலையசைத்து, மகிழ்ந்து தன் கழுத்திலணிந்திருந்த பூமாலை யொன்றை முனிவருக்குப் பிரசாதமாக யளித்தருளினார். முனிவரும் பணிந்து அம் மாலையைப் பெற்றுக் கண்ணிலொத்தியும் தலைமீது வைத்து போற்றியும், சிவனை விட்டுப்பிரிய மனமில்லாதவராய், விடை பெற்றுக் கைலையை நீங்கி அமராவதி வந்தடைந்தார். அது சமயம் எல்லா வைபவங்களுடனும் இந்திரன் பவனி வந்து கொண்டிருந்தான். முனிவர் இந்திரனுக்கு மரியாதை செய்ய நினைத்து சிவப்பிரசாதமான மாலையைக் கொடுத்தார். வெள்ளையானைமீதிருந்த இந்திரன் செல்வச் செருக்கினால், அலட்சியமாக அம்மாலையை அங்குசத்தால் வாங்கி யானைத் தலைமீதிலே வைத்தான். யானையோ தன் துதிக்கையால் அதையெடுத்து மதத்தினால் காலிலிட்டுத் துவைத்தது. துருவாசருக்கு அளவில்லாக் கோபம் பொங்கி "அடே இந்திரா நீ உன் செல்வச்செருக்கினால் சிவனருளாகிய மாலையை மரியாதையின்றி அங்குசத்தால் வாங்கி யானையின் தலையில் வைத்தாய். அதுவும் தன் காலில் வைத்துத் துவைத்தது, இத் தனைக்கும் காரணமான உன் செல்வச்செருக்கு ஒழிந்து போகும் "உன் செல்வத்துக்குச் சமுத்திரமே கதி" என்று சபித்தார்.

இந்திரன் பயந்து நடுங்கி யானையினின்றும் கீழே குதித்து முனிவரது பாதங்களைத்தவிர கதியில்லையென்று துணிந்து அவராசிரமத்திற்குச் சென்று அடிபணிந்து சாபவிமோசனஞ் செய்தருளப் பிரார்த்தித்தான். விற்பிடித்து நீர்கிழிய வெய்த வடுப்போல மாறும் சான்றோராகிய முனிவரும் "நீ விஷ்ணுவாதி தேவரோடு எப்பொழுது பாற்கடலையடைகிறாயோ அப்போது உன்செல்வத்தை மீளவும் அடைவாய்" என்றருள் செய்தார்.

பின்னர் சிவனது கட்டளையால் விஷ்ணு சகல தேவர்கட்கும் அமுதத்தைப் பரிமாறினர். தேவர்களுண்டு அமரத்வம் அடைந்தனர். இந்திரனும் அசுரர்களை வெற்றிகொண்டு நீலகண்டரை மறவாத அன்புடனே தேவராஜாவாக முன்போல் விளங்குவானாயினன்.

## தேவர்கள் முதலாயினோர் பூசித்தது.

நான்முகனுகிய பிரமதேவர் தெற்குத்திக்கில் ஒரு தீர்த்தமுண்டுபண்ணி அதன் கரையில் சிவலிங்கம் நிறுவிச் சிவாகம முறைப்படி பூசித்து வரம் பல பெற்று தனது பிரம லோகம் சேர்ந்தார். இது பிரமதீர்த்தமென கோயில் தெற்கு கோபுரத்திற்கு நேரே தெற்குவீதிக்குத் தென்புறமாயுள்ளது.

விஷ்ணு மேற்குத்திக்கில் ஒருதடாகம் உண்டுபண்ணி அதன் கரையில் சிவலிங்கம் நிறுவிப் பூசித்து சிவனருளைப் பெற்று பாற்கடலிலுண்டான லட்சுமியை மணந்து கௌஸ்துப ரெத்னத்தையும் அணிந்து நீலமேகவண்ணனுனர். இவர் பூசித்த தலத்திலுள்ள சிவபெருமானுக்கு "விஷ்ணுநாதர்" என்று பெயர். இவ்வாலயம் 'லட்சுமீசுவரஸ்தானம்' என்று வழங்கும். இந்த லட்சுமி தீர்த்தம் ஆயக்குளம் என வழங்கும்.

இந்திரன் கிழக்குத் திக்கில் தீர்த்தம் ஒன்றுண்டு பண்ணி சிவலிங்கம் நிறுவிப்பூசித்துச் சிவனை மறந்த பாபம் நீங்கப்பெற்று, துர்வாச சாபமுமொழியவே முன்போல் தனது செல்வங்களைத் திரும்பப்பெற்று, இந்திரலோக மடைந்து சுகமாக வாழலுற்றுன். இந்த ஸ்தலத்திற்கு அர்த்த சித்தி செல்வங்களையருளும் தலம் என்று பெயராயிற்று. இத்தீர்த்தம் செட்டித்தோப்புக்குளம் என வழங்கும்.

அக்னிபகவான் அக்னிதிக்கில் தன்பெயரால் தீர்த்தமுண்டுபண்ணி சிவலிங்கம் நிறுவி வழிபட்டு வரம்பல பெற்றுன். இது பூநாரிருப்பு எனும் கிராமத்திலிருக்கிறது.

97328

யமன் தெற்குத் திக்கில், யமதீர்த்தம் ஒன்றுண்டு பண்ணி சிவலிங்கம் நிறுவி யமேசுவரனென்று பெயருடன் பூசித்து வரம் பெற்றான். இது நரிக்குடி எனும் கிராமத்தில் இருக்கிறது.

நிருதி தேவன் நிருதிமூலையில் ஒரு தீர்த்தம் உண்டு பண்ணி சிவலிங்கம் நிறுவிப் பூசித்தார். இவ்விடம் நிருதீசுவரம் எனப்படும். இது புலவநத்தம் எனும் கிராமத்திலிருக்கிறது.

வருணன் மேற்குத்திக்கில் தீர்த்தமுண்டுபண்ணி சிவலிங்கம் நிறுவிப்பூசித்தான். இவ்விடம் வருணேசுவரம் எனப்பெயர் பெறும். இது பூந்தோட்டம் எனும் கிராமத்திலிருக்கிறது.

வாயு தனது திக்கில் தீர்த்தமுண்டுபண்ணி சிவலிங்கம் நிறுவிப் பூசித்தான். இவ்விடம் மருதீசுவரம் எனப்படும். இது மருதூர் எனும் கிராமத்திலிருக்கிறது.

குபேரன் வடக்குத்திக்கில் தீர்த்தமுண்டுபண்ணி சிவலிங்கம் நிறுவிப்பூசித்தான். இவ்விடம் குபேரசுவரம் எனப்படும். இது கீழஅமராவதி சர்வமான்ய கிராமத்திலிருக்கிறது

ஈசானன் தனது திக்கில் தீர்த்தமுண்டுபண்ணி சிவலிங்கம் நிறுவிப்பூசித்தான். இவ்விடம் ஈசானேசுவரம் எனப்படும். இது சித்தன்வாழ்வூர் கிராமமாயிருக்கிறது.

சந்திர சூர்யர் இருவரும் கிழக்குத்திசையில் தம்தம் பெயரால் இரண்டு தீர்த்தங்களுண்டுபண்ணி இரண்டு சிவலிங்கங்களையும் நிறுவிப் பூசித்தனர். இவ்விடம் சோமேசுவரமென்றும் சூரியேசுவரமென்றும் பெயர்பெறும். (இவைகள் தற்போது மறைந்து நஞ்சையாகிவிட்டன).

## சவாசனன் அரச செல்வத்தைப் பெற்றது.

முன்னொருகால் வடநாட்டில் துச்சகன் எனும் பெயருடன் ஒரு அரசன் இருந்தான். அவன் மிகுந்த பாபி. பஞ்சமா பாதகங்களை கொஞ்சமும் அஞ்சாமல் செய்பவன்

தர்மமே அவனுக்கு விரோதி. ஜனங்களையும் உயிர்ப்பிராணி களையும் துன்புறுத்துவதே அவனுக்கு ஆனந்தம். மற்றைய தேசத்தரசர்கள் இவனது அடாத செயலை யொழிக்கமுடியா மல் கடைசியில் ஒன்றுகூடி இவனிடம் யுத்தத்திற்கு வந்து பெருஞ் சேனையையழித்து அரசனையும் கொன்றார்கள். உல கம் மகிழ்ந்தது. யமதூதர்கள் இவனதுயிரைக் கொண்டு போய் நரகத்திலிட்டு வதைத்து மீண்டும் யமனிடம் கொண்டு வந்து நிறுத்தினார்கள். யமனும் இவனைப்பார்த்து இன்னும் உன் பாபங்களுக்குத்தக்க தண்டனை பாக்கியிருக்கிறது. ஆகலால் நீ பைசாச வடிவத்தோடு பலகாலம் அலைந்து திரிவாய் என்று கோபத்தோடு கட்டளையிட்டான். உடனே இவன் பைசாச வடிவத்தையடைந்து பூவுலகில் உயிர்களை வருத்தியலைந்து பிணக்குவியலையே ஆசனமாகயிருந்து சவா சனன் எனப்பெயருடனிருந்து வருநாளில் தெய்வாதீனமாக சிவனுக்குச்சமமான அகத்திய முனிவரை ஒருநாள் சந்தித்து அவரையும் அதட்டி யருகிலே சென்று கொன்று தின்னச் சென்றான். கருணை வடிவமான முனிவர் ஞானக்கண்ணால் இவனது பாபவடிவ வரலாற்றையுணர்ந்து "ஏ பைசாசமே நீ முன்ஜென்மத்தில் இப்படி அநேக உயிர்களைக் கொன்று நரகத்திலே கிடந்து இன்னும் பைசாசமாயலைகிறாய் நீ உன் பாபத்தினின்றும் விடுபட்டு முன்னேயிருந்தபடி சுகமான அரச செல்வத்தையடைய விரும்பினால் நான் கூறுவதைக் கேட்பாய்" என்றவுடனே முனிவரது சிவவேட தரிசனத்தா லும் அருள்வாக்கினாலும் பக்குவப்பட்ட மனத்தினனாய் அகத்தியரை வழிபட்டு உபதேசித்தருளும்படி தண்டாகார மாய் நிலத்திற்கிடந்தான். அகத்தியரும் "ஏ பைசாசமே! இப் பூமியில் காசியாரண்யம் என்று ஒப்புயர்வற்ற சிவதலம் ஒன்றுண்டு. அங்கே சிவபெருமான் நீலகண்டராய் ஆபத் சகாயர் எனும் பெயருடன் குருமூர்த்தியாயும் விளங்குகிறார். அங்குள்ள அமிர்த புஷ்கரணியில் மூழ்கி யவரை அன்புடன் தெரிசித்தால் உன் பாபம் நீங்கிப் பழைய மனித வடிவமும் பெற்று அரசபோகத்தையும் இந்திரனடைந்ததுபோலடைந்து இன்புறுவாய்" என்றருள் செய்தார். பைசாசமும் முனிவ

ரைப் பணிந்து என் பாபத்தால் அவ்வூரை அறியமுடியாம லிருக்கிறேன். நீரே எனக்குக் கருணைசெய்து வழிகாட்டி யருளவேண்டுமென்று விண்ணப்பித்தான். முனிவர் முன் செல்ல இவனும் பின்சென்று இத்தலத்தின் எல்லையை யடையவே நல்லுணர்வு பெற்றான்.

முனிவர் அமுதபுஷ்கரணியில் மூழ்கி சிவச்சின்ன மணிந்து ஆலயம் வலம்வந்து சிவதெரிசனம் செய்தபடியே இச்சவாசனனும் செய்ததனால் தன் பாபம் நீங்கி நல்ல மனித வடிவத்தையடைந்தான். பிறகு சிலகாலம் தங்கி தீர்த்தமாடி குருதெக்ஷணாமூர்த்தயை தெரிசித்த புண்ணியத்தால் தன் பழைய செல்வங்களையடைந்து அரசனாகி சிறந்த நீதியுடன் உலகம்போற்ற சிவதருமம் பல செய்து இத்தலத்துக்கு மீண்டும் வந்து பலதருமங்களைச் செய்து ஆலயத்திருப்பணி யியற்றி சிவனருள் பெருகப் பலகாலமிருந்து சிவலோக மடைந்தான்.

## பார்வதியம்மையின் திருவவதாரம்.

கைலாச பருவதத்தில் ஓர்நாள் பார்வதிதேவியார் தனது தோழியர்களோடு பந்தாடினார். அப்படியாடியபோது ஒரு பந்து கிளம்பி ஆகாயத்தினுச்சியிலே செல்லும் சூரிய னுக்கும் உயரமாகப்போனது அதைத் திரும்பக் கையால் பிடிக்கும்பொருட்டு தேவியார் கையை உயரத்தூக்கிப்பந்தை எதிர்பார்த்து நின்றதைக்கண்ட சூரியன் அம்மையின் பந்து விளையாட்டு என்றறியாமல் தன்னை யதேயிடத்தில் நிற்கும் படி கட்டளையிடுவதாக நினைத்து வேகமாகச் செல்லும் ஏழு குதிரைகளையும் பிடித்து நிறுத்தினான். உலகம் நடைபெறும் பொருட்டு காலத்தை அளக்குங் கருவியாய் உள்ள சூரியன் நிற்கவே உலகமுயிர்களும் நிலைகலங்கின. தேவரும் மூவரும் செய்வதறியாது கலங்கிச் சிவனை சரணமடைந்தனர்.

சிவபெருமான் தேவியைப்பார்த்து உன்னால் உலகத் திற்கு பெருங் கேடுண்டாகியது. அப்பாபத்தைப் போக்க நீ பிறவியெடுக்கக்கடவாய் என்று சொன்னவுடனே தேவி

பயத்து "ஏ சிவநாதா நான் ஒரு பாபத்தையும் அறியாது உம்மை விட்டகன்றிருக்க நான் செய்த பிழை யாது" என்று கேட்டவுடன் சிவபெருமான் நடந்த வரலாற்றைக் கூறியருளினார். தேவியும் நான் அப்படிப்பிறந்து உம்மையே நாதனாக அடையத் தவம் செய்யும்போது என்னையாட்கொண்டருள வேண்டும் என்றடிபணிந்தார் சிவனும் அப்படியே அருள் செய்வதாக வாக்களித்தார்.

பார்வதி தேவியார் பூவுலகில் எது சிறந்த தலமென்றுய்ந்து இக்காசியாரண்யமே என்று தெளிந்து இத்தலத்திலே அவதரித்தருளக் கைலையை நீங்கினார்.

சிவனருளால் ஒரு பெண் குழந்தையாய் அமுதபுஷ்கரணியில் செந்தாமரைப்பூவில் கிடந்தார். மகாசிவபக்தரும் புத்ரப்பேறில்லாமல் சிவனை நோக்கித்தவம் செய்யும் மகாமதி எனும் அந்தணர் இங்கே தீர்த்தமாடிச் சிவாலயத் தெரிசனத்துக்குப் புறப்படும் சமயத்தில் குழந்தையைக் கண்டு சிவனருளென்று ஆனந்தங்கொண்டு அருகிலே சென்று குழந்தையை எடுத்து வீட்டிற்கு வந்து கற்பிற்சிறந்தவளாகிய தன் மனைவி சுசீலையிடங் கொடுத்து வரலாற்றையும் உறைத்தார். அப்புண்ணிய மங்கையும் மெய்ப்புளகாங்கிதமாக குழந்தையை வாரியெடுத்தணைத்து நாளொரு மேனியும் பொழுதொருவண்ணமுமாய் வளர்த்துவந்தனர்.

சிவசக்தியாகிய குழந்தை எல்லா வித்தைகளையும் ஓதாதுணர்ந்து வளர்ந்து மணப்பருவத்தையடைந்தது. தாயுந் தந்தையும் இத்தகைய பெண்ணுக்குத் தக்க கணவனையெங்கே தேடிப்பெறமுடியுமென்று மனம் வருந்திச் சிவனை துதித்துப் பெண்ணுக்குத்தக்க நாயகனைத் தந்தருளவேண்டி வருவாராயினர். இந்நிலையில் இப்பெண் தாய்தந்தையரை நமஸ்கரித்து நான் யாரையும் மணம் செய்துகொள்ள நினைக்கவில்லை. சர்வலோக நாயகனான பசுபதியை நோக்கித் தவம் செய்யவே எண்ணுகிறேன். அதற்கு நீங்கள் உத்தரவு தந்தருள வேண்டும் என்று விண்ணப்பித்தது.

தாயுந் தந்தையும் மனம் பூரித்து அப்படியே செய்வாய் என்று விடை கொடுத்தனர். உடனே இல்லத்தை நீங்கி ஸ்ரீவிசாலம் என்னும் தலத்தை ஏற்படுத்தி ஸ்ரீ விசாலேசுவரர் என்னும் மகாலிங்கத்தை நிறுவிப் பூசித்து சிவனையே நாயகனுயடையவேண்டுமென்று கடுந்தவம் புரிந்தது. இவ்விடம் கோவிலுக்கு வடபுறத்தில் வடக்குவீதிக்குப் பக்கத்தில் சந்தைவெளியென வழங்குகிறது.

கைலாயத்தில் சிவபெருமான் சக்திக்கு முன் வாக்களித்தபடி திருமணம் செய்து தன்பக்கத்திலே வைத்தருள வேண்டுமென்று ஓர் கிழ அந்தணனுய் இத்தலத்தை நயடைந்து அம்பிகை தவஞ்செய்யுமிடத்திற்கு அதிதியாக வரவே அம்பிகையும் முறைப்படி உபசரித்து அவராசியைப்பெற்ருள் வந்த அந்தணர் அப்பெண்ணின் தவத்துக்குக் காரணத்தை வினவ பெண்ணும் தன் கருத்தைக் கூறியதைக்கேட்டுச் சிவபெருமானது வேடத்தையும் செயலையும் இழிவாகப் பேசியதைக்கேட்டு மனஞ்சகியாத பெண் சிவனது அருட் செயல்களையும் அவரது மேனியினழகையும் வர்ணித்து அவருக்குச் சமமான கடவுளே இல்லையென்று காரணகாரிய முறைப்படி சிவபரத்வத்தை நிலைநாட்டியது. மேலும் அதிதியானவர் வேடிக்கையாய்ச் சில பேசவே தவப்பெண்ணும் கோபமடைந்து உமது கிழத்தனமான மேனிக்கும், சிவச் சின்னத்துக்கும் மரியாதை கொடுத்து உம்மை சும்மா விடுகிறேன் நீர் உம்மிடத்துக்குப்போம் என்று மொழிந்து தடாகத்துக்குச் சென்ருள். வயோதிகரும் பின்னே சென்று ஏலாளகே! ஏலாளகே! என்று கையை நீட்டித் தொடவந்த போது பெண்ணும் நடுநடுங்கி சிவபெருமானைத் தியானித்து "ஏ ஆபத்சகாயா! என்னைக்காப்பாற்றியருளும்" என்று கதறியவுடன் அந்தணராய் வந்த சிவபெருமான் உருமாறி இடபாரூடராய்க் காட்சிதந்து ஏலாளகே! நானே அதிதியாக வந்தவன். உன் உறுதியான மனநிலையை யுலகமறியும்படி திருவிளையாடல் செய்தோம். நான் முன் வாக்களித்தபடி திருமணம் செய்தருளுவோம் என்று திருவாய்மலர்ந்தருளி மறைந்தார்.

அம்பிகையும் தாய்தந்தையரிடம் சென்று நிகழ்ந்ததைக் கூறி திருமணத்திற்கு வேண்டியவைகளைச் சித்தம் செய்தனர். சிவபெருமானும் பிரமவிஷ்ணு, தேவ முனிவர்களுடன் எழுந்தருளி ஏலாளகாம்பிகையைத் திருமணம் செய்தருளித் தன்னிடத்தமர்த்தியருளினுர். ஸ்ரீவிசாலமென்னும் இடத்தில் திருமணம் நடைபெற்றதால் இதற்குத் திருமணமங்கலமென்று பெயர் வந்தது. இங்குள்ள சிவனுக்குக் கௌரீசர் என்று பெயர். இத்தீர்த்தத்துக்குப் பாசமோட்சம் என்றும் பெயருண்டாயிற்று.

## மகாப்பிரளயம் உண்டானது.

உலகமுடிவில் மஹாப்பிரளயம் உண்டானபோதும் இந்த ஒருதலமட்டும் அழியாதிருந்தது. சிறிதுகாலம் செல்ல ஆலயமும் மறைந்தது சிவலிங்கம் ஒன்றே மீதமிருந்தது. அப்போது இங்கிருந்த கறையான்களே சிவனைப் பூசித்து வந்தன. இந்நிலையில் காலநேமி என்னும் அசுரனைக் கொன்று மகாவிஷ்ணு கோபத்தினல் தன்னையே மறந்தவராய் தனது பக்தர்களாய்த் தன்னைத்துதிக்கவந்த தேவர்களையும் கொல்வதற்காக வில்லையூன்றித் தலையை அதன் மேல் வைத்து நின்றுகொண்டிருந்தார். தேவர்கள் இத்தலத்திலே சிவனைச் சரணமடைய வந்தனர். இப்படிப்பட்ட சமயத்தில் தேவர்கட்கு ஒரு யுக்தி தோன்றியது. தேவர்கள் கரையான்களைப்பார்த்து உங்கள் ரூபத்துடன் நாங்கள் விஷ்ணுவினது வில்லின் நாணையறுத்துவிட்டால் அவர் தலையே யுருண்டுபோகும் அதற்கு நீங்கள் சம்மதிக்க வேண்டுமென்று வேண்டினர். கறையான்களோ தங்கட்கு தோண்டுமிடத்தில் அமுதமூறும்படி வரந்தந்தால் தாமே சென்று அப்படிச் செய்வதாய் வரங்கேட்டனர். தேவர்களும் அப்படியே வரங்கொடுத்தனர். கறையான்கள் உருவத்தோடு தேவர்கள் சிவபூசை செய்தனர். அக்கறையான்கள் கூறியபடி நாணையறுத்துவிடவே விஷ்ணுவின் தலை யறுபட்டு யாகத்திற்குறிய மகாவீரம் என்னும் கர்மபாத்திரமாகி விட்டது.

இதையறிந்த லட்சுமி வருந்தி சிவபிரானிடம் முறையிடவே 'ஏ லட்சுமி உன் கணவன் தலையை அவருடன் பொருந்தவை அது பொருந்தும் என்று சிவனும் வரமளித்தபடியே செய்து லட்சுமி மஹாவிஷ்ணுவை மீளப்பெற்ருள்.

**முசுகுந்த சக்ரவர்த்தி வழிபட்டது.**

முசுகுந்தர் எனும் சக்ரவர்த்திக்கு அமுதோகர் என்று ஒருமந்திரி இருந்தார். இருவரும் சிவபக்தர்கள். இந்திரன் முதலியவரும் வெற்றிகொள்ளமுடியாத பகையை வெல்ல வல்லவர் முசுகுந்தர் ஆனமையால் இந்திரன் முசுகுந்தரை வேண்டித் தன் பகைவரான பல அசுரர்களை வென்று பயம் நீங்கினன். இந்த மகிழ்ச்சியால் இந்திரன் மெய்மறந்தவனய் தன்னையும் தன் இந்திராணியையும் தவிர எல்லாச் செல்வங்களையும் கொடுத்தானுக. இந்திரன் பூசித்த தியாக ராஜாவையும் முசுகுந்தர் பெற்று ரதத்திலேறி இந்தக்காசி யாரண்யத்தின் வழியாய்த் தன் தலைநகராகிய திருவாரூரை நோக்கி வந்துகொண்டிருந்தார், இத்தலத்தில் தேர் தடைபட்டு நின்றவுடன் ஏதோ அற்புதமிருக்கிறதென்று அறிவினல் நிச்சயித்து சேவகர்களைக்கொண்டு பரிசோதிக்கச் செய்தார்.

இப்படிப்பட்ட நிலையில் ஒரு வேடனும் அவன் மனைவியும் கண்ணீர் பெருக கோவென்று அலறி ஓடிவந்ததைக் கேட்டு சக்ரவர்த்தி நேரிற் சென்று வரலாற்றைக் கேட்டார். அவர்கள் தாம் உண்பதற்காக ஒரு கொடியின் அடிக் கிழங்கை வெட்டியபோது பயமான சப்தமும் நெருப்புப் பொறியும் பறந்தன. எங்கள் கண்களும் மறைந்தன. இதுவே நடந்ததென்று கூறினர்கள். அரசன் மெதுவாய் அடையாளங்கேட்டபடி அவ்விடத்தைச் சோதிக்கச் சிவலிங்கம் வெளிப்பட்டது.

சிவபக்தரான சக்ரவர்த்தி அவ்வேடர்கட்கு வேண்டிய மட்டும் பொன்னைக் கொடுத்துவிட்டுத் தன் மந்திரியைப் பார்த்து இவ்விடத்தில் சிவாலயங் கட்டி கிராமத்தையும் ஏற்படுத்திக் கும்பாபிஷேக நாளையும் ஏற்படுத்தித் திருமுகம்

அனுப்பும்படி கட்டளையிட்டு அளவிலாத பொன் மூட்டைகளை யவரிடம் ஒப்புவித்து ஆரூரை யடைந்தார். அமுதோகர் சிவ திருப்பணியைச்செய்து முடித்து கும்பாபிஷேகம் கண்டருள வரும்படி அரசர்க்கு ஆளனுப்பினர். சக்ரவர்த்தியும் இங்கேவந்து சிவாலயத்தைத் தெரிசித்து மகிழ்ந்து மந்திரியைக் கொண்டாடி கும்பாபிஷேக தெரிசனம் செய்திருந்தார். மந்திரி அமுதோகர் முன் அரசன் தந்த அத்தனை செல்வத்தையும் அப்படியே முன்னே கொண்டுவந்து வைத்து வணங்கினர். அரசர் வரலாற்றை வினவ மந்திரி தனது செல்வத்தைச் சிவார்ப்பணமாக விரும்பிச் செய்ததற்கு மன்னித்தருளவேண்டினர். அரசன் சிவ புண்ய பலனைத் தனக்குத் தத்தம் செய்யும்படி கேட்டார். மந்திரி இணங்கவில்லை. அதிற் பாதியேனும் கால்பங்கேனும் கொடுக்கும்படி கேட்டும் மந்திரி சம்மதியாமையால் அவர் தலையை வெட்டிவிட உத்தரவிட்டனர். கொலைஞர்களும் மனம் வருந்தித் தயங்கினர்கள். மந்திரி "நான் சிவத்தியானத்தில் இருக்கிறேன். சிவ புண்யமே யான் விரும்பியது. அதனல் எது நேர்ந்தாலும் சரி அரசனது கட்டளையைச் செய்யுங்கள்" என்று தேற்றினர். கொலைஞர் வாளையோங்கியவுடன் சிவனதாணையால் மந்திரி அமுதோகர் உயிர் சிவ சந்நிதியை யடைந்தது. இதற்கு அடையாளமாக இத்தல முழுதும் "அமுதோகன் அமுதோகன்" என்னும் சப்தமே குடிகொண்டிருந்ததை முசுகுந்தன் முதலாயினோர் கேட்டு மனம் வருந்தி அமுதோகர் அடைந்த அழிவிலாப் பதவியையும் சிவதிருப்பணியின் பலனையும் கண்ணாரக்கண்டு வாயார வாழ்த்தித் தலையாரக் கும்பிட்டு வாழ்வாராயினர்.

"இத்தகைய சிவபக்தனைக் கொல்ல உத்தரவிட்டவன் யார்? அவனைக் கொல்லுவேன்" என்று காளி சூலத்துடன் முசுகுந்த சக்ரவர்த்தியிடம் வரவே அவர் பயந்தவராய் முருகனைச் சரணடைந்தார். முருகனது சேனைகளையும் காளி ஒழித்துவிடவே பக்தனைக் காப்பாற்றும்பொருட்டு முருகனே வந்து காளியின் சூலத்தைப் பறித்து அவளைக் கால்விலங்கிட்டு அடக்கியருளினர். பிறகு காளி சாந்தமடைந்து

தனக்குப் பலவிதமான பூசைகளைச் செய்யும்படி சக்ரவர்த்திக்குக் கட்டளையிட்டருளும்படி முருகனை வேண்டிக் கொண்டபடி முருகனும் உத்தரவளித்தார். முசுகுந்தனும் காளிபூசையியற்றிப் பயம் நீங்கி இத்தலத்தைவிட்டு நீங்க மனமில்லாதபடி சிவ தெரிசனம் செய்து சிறிது காலம் தங்கினான்.

சிவபெருமான் ஒருநாள் வயதான அந்தண வடிவத்துடன் வந்து அரசனையணுகி "ஏ சக்ரவர்த்தியே நானிருப்பது காஞ்சி. இத்தல புராணத்தைப் படித்துக்கொண்டு இங்கேயே வசிப்பதற்காக வந்திருக்கிறேன். ஆனதால் எனக்கு ஒரு கிராமத்தைத் தானம் கொடுத்தருளும்" என்று கேட்டபடியே சக்ரவர்த்தியும் தாரைவார்த்து சிவார்ப்பணம் செய்தார். இவ்வந்தணர் திடீரென்று மறையவே சக்ரவர்த்தி முதலானவர் இது சிவபெருமானுடைய திருவிளையாடல் என்று போற்றி வணங்கி வாழ்ந்து வரலாயினார்கள்.

## உற்சவம்.

பஞ்சப் பருவங்கள்:- மாத குருவாரந்தோறும் விசேஷ தெரிசனமும் மாசி குருவாரங்களில் விசேஷ அபிஷேக ஆராதனைகள் ஸ்ரீகுரு தெட்சணாமூர்த்திக்கு நடைபெறும்.

சித்திரா பௌர்ணமி:- சுவாமி தீர்த்தவாரி.

பங்குனி-உத்தரம் ௸

## நிர்வாகம்.

1. தேவகோட்டை பழ. செ. பழ. செல்லப்ப செட்டியார். *மானேஜிங் டிரஸ்டி.*
2. முத்துகரு. மு. முத்தையா செட்டியார்.
3. பழ. செ. லெ. மீனாட்சிசுந்தரஞ் செட்டியார்.

தலபுராணம்:- வடமொழியில் கையேடாக (அச்சடிக்காமல்) இருக்கிறது. தமிழில் அச்சடித்த புராணம் ஒன்றிருக்கிறது.

*ராஜேஸ்வரி பிரஸ், மன்னார்குடி.*

97338

உ

திருச்சிற்றம்பலம்

# திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரம்

## திருஇரும்பூளை—வினாவுரை—பண்—இந்தளம்.

சீரார் கழலே தொழுவீ ரிதுசெப்பீர்
வாரார் முலை மங்கையொடு முடனாகி
ஏரா ரிரும்பூளை யிடங்கொண்ட வீசன்
காரார் கடனஞ் சமுதுண்ட கருத்தே. 1

தொழலார் கழலே தொழு தொண்டர்கள் சொல்லீர்
குழலார் மொழிக் கோல்வளை யோடுடனாகி
யெழிலா ரிரும்பூளை யிடங்கொண்ட வீசன்
கழலான் கரிகா லிடையாடு கருத்தே. 2

அன்பா லடிகை தொழுவீ ரறியீரே
மின்போன் மருங்குன் மடவா ளொடுமேவி
யின்பா யிரும்பூளை யிடங்கொண்ட வீசன்
பொன்போற் சடையிற் புனல்வைத்த பொருளே. 3

நச்சுத் தொழுவீர்க ணமக்கிது சொல்லீர்
கச்சிப் பொலிகாமக் கொடியுடன் கூடி
யிச்சித் திரும்பூளை யிடங்கொண்ட வீச
னுச்சித் தலையிற்பலி கொண் டுழலானே. 4

சுற்றார்ந் தடியே தொழுவீ ரிதுசொல்லீர்
நற்றாழ் குழனங்கை யொடும் முடனாகி
யெற்றே யிரும்பூளை யிடங்கொண்ட வீசன்
புற்றா டரவோ டென்பு பூண்ட பொருளே. 5

தோடார்மலர் தூய்த்தொழு தொண்டர்கள் சொல்லீர்
சேடார்குழற் சேயிழையோ டுடனாகி
யீடா யிரும்பூளை யிடங்கொண்ட வீசன்
காடார்கடு வேடுவனான கருத்தே. 6

ஒருக்கும் மனத்தன் பருள்ளீரிது சொல்லீர்
பருக்கை மதவேழ முரித்துமையோடு
மிருக்கை யிரும்பூளை யிடங்கொண்ட வீச
னரக்கன் னுரந்தீர்த் தருளாக்கிய வாறே. 7

துயராயின நீங்கித் தொழுந்தொண்டர்கள் சொல்லீர்
கயலார்கருங் கண்ணி யொடும் முடனாகி
யியல்பா யிரும்பூளை யிடங்கொண்ட வீசன்
முயல்வா ரிருவர்க் கெரியாகிய மொய்ம்பே. 8

துணைநன்மலர் தூய்த்தொழுந் தொண்டர்கள் சொல்லீர்
பணைமென் முலைப் பார்பதியோ டுடனாகி
யிணையில் யிரும்பூளை யிடங்கொண்ட வீச
னணைவில் சமண் சாக்கிய மாக்கியவாறே. 9

எந்தை யிரும்பூளை யிடங்கொண்ட வீசன்
சந்தம்பயில் சண்பையுண் ஞான சம்பந்தன்
செந்தண்டமிழ் செப்பிய பத்திவை வல்லார்
பந்தம் மறுத் தோங்குவர் பான்மையினாலே. 10

சுவாமி பெயர்—காசியாரண்யேசுவரர்.
தேவியார் பெயர்—ஏலவார்குழலம்மை.

திருச்சிற்றம்பலம்.

